அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகம்
20 நவ 2017
சென்னை-600 006

20/11/2017 For circulation

சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தனித் தேர்வர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை

அரசாணை (நிலை) எண். 243

நாள் : 17.11.2017.
திருவள்ளுவர் ஆண்டு , 2048
ஹேவிளம்பி வருடம், கார்த்திகை 1,

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த் துறை, நாள்.22.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக்கல்வி (ஜிஇ.1)த் துறை, நாள்.09.08.2017.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.104944/ எச்எப்.1/2017, நாள். 27.10.2017.

-----

ஆணை:–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசுப் பொதுத்தேர்வுகள் நடத்தப்படும் எனவும், மேல்நிலைத் தேர்வில் அனைத்து பாடங்களிலும் மாணவர்கள் தொடர் கற்றலை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு பாடத்திலும் 10 விழுக்காடு மதிப்பெண்கள் அகமதிப்பீடாக வழங்கலாம் எனவும் ஆணையிடப்பட்டது.

2. இதன் தொடர்ச்சியாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கற்றலுக்கு மாணவர்களின் வருகைப்பதிவு முக்கியம் என்பதால், மாணவர்களின் வருகைப் பதிவு, உள்நிலைத் தேர்வுகள் மற்றும் ஒப்படைவு / செயல் திட்டம் / களப் பயணம் ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வாறு மதிப்பெண் வழங்குவது என்பது குறித்த வடிவமைப்பு மற்றும் நெறிமுறைகள் குறித்தும் ஆணையிடப்பட்டது. மேலும், அகமதிப்பீட்டிற்கான 10 மதிப்பெண்களை வழங்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது. எனினும், இந்நடைமுறையானது பள்ளியில் பயின்று தேர்வெழுதும் மாணவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதால், மேல்நிலைத் தேர்வெழுதும் நேரடி தனித்தேர்வர்களுக்கு அகமதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களை 100 மதிப்பெண்களுக்கு கணக்கிட்டு வழங்கலாம் என தெரிவித்துக்கொண்டு அது குறித்து தேர்வுத் துறை இயக்குநர் அரசின் ஆணையினை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

த.பி.பா.

3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு, அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, மேல்நிலை முதலாமாண்டு தேர்வெழுதும் நேரடித்தனித் தேர்வர்களுக்கு கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி தேர்வுகளில் மதிப்பெண் வழங்கலாமென முடிவெடுத்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

i. நேரடித் தனித்தேர்வர்களுக்கு அகமதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்த வேண்டாம்.

ii. அதற்குப் பதிலாக நேரடித் தனித்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களை 100 மதிப்பெண்களுக்கு கணக்கிட்டு வழங்கலாம். அவ்வாறு, 90–க்கு பெற்ற மதிப்பெண்களை 100–க்கு மாற்றம் செய்யும் பொழுது பெறும் மதிப்பெண் தசமமாக இருந்தால் (பெருமம், சிறுமம் கருதாமல்), அம்மதிப்பெண்ணை அடுத்த முழு எண்ணிற்கு மாற்றலாம்.

iii. மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி அடைய நேரடித் தனித்தேர்வர்கள் அனைத்துப் பாடங்களிலும் எழுத்துத் தேர்வில் 100 மதிப்பெண்களுக்கு குறைந்த பட்சம் 35 மதிப்பெண்கள் பெற வேண்டும்.

4. மேலே பத்தி 3–ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளை 2017–2018–ஆம் கல்வியாண்டிலிருந்து பின்பற்றுமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.

**நகல் :**
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/11/17
பிரிவு அலுவலர்.